மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: தலைவர் அவர்களே, மாணவியர் விடுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு பிறகுதான் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாணவியர்களுக்கு விடுதிகள் கட்டி முடித்த பிறகு மாணவர்களுக்கான விடுதிகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினாக்கள் தற்போது எடுத்துக்கொள்ளப் படுகின்றன. வினா எண் *469*, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

469—

ராதாபுரம் தொகுதியில், குளங்களில் செங்கல், ஓடு தயாரிப்புக்காக மண் எடுப்பதை முறைப்படுத்துதல்

**** 13798—திருமதி ரமணி நல்லதம்பி:***

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், ராதாபுரம் தொகுதியில் செங்கல் தயாரிப்பாளர்களும், ஓடு தயாரிப்பாளர்களும் குளங்களில் மண் எடுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை முறைப்படுத்தி அரசு வருவாய் பெற நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ : திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் அமைந்துள்ள *3* குளங்களில் மண் எடுத்துக் கொள்ளும் மாதாந்திர தற்காலிக அனுமதி ஒருசில செங்கல் மற்றும் ஓட்டு தயாரிப்பாளர்களுக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டு மண் எடுக்கப்படுகிறது. செங்கல் மற்றும் மண் பானைகள், ஓடுகள் தயாரிப்பதற்காக இந்தக் குளங்களில் எடுக்கப்படும் களி மண்ணுக்கு *10* கன அடிக்கு ரூ. *2.25* வீதம் சிறு கனிம பிரிவின் கீழ் சீனியரேஜ் கட்டணம் விதிக்கப்பட்டு அரசுக்கு வருவாய் கிடைக்கிறது என்பதையும் கடந்த *3* ஆண்டுகளில் ரூ. *59,300* சீனியரேஜ் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 2]

திருமதி ரமணி நல்லதம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சிறிய தொழிற்சாலைகளுக்கு 10 சதுர அடிக்கு 2 ரூபாய் வசூலிப்பதாகச் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பாக வருமான வரி மாத்திரம் பல இலட்சம் ரூபாய்களுக்கு இந்த செங்கல் தயாரிப்பாளர்கள் ஏய்ப்பு செய்திருப்பதாக நமது தமிழக அதிகாரிகள் கண்டுபிடித்திருந்தார்கள். அந்த விஷயம் கோர்ட்டிலே இருக்கிறது. அதற்குப் பின்னர் அவர்கள் அதே அளவில் உற்பத்தி செய்து விற்றுக்கொண்டிருக்கிறார்களே, அதிகாரிகள் ஏதாவது அந்த விற்பனை வரியைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களா? ஒரு செங்கல் ஒரு ரூபாய் என்கின்ற நிலையிலே ஓடு 4 ரூபாய் 5 ரூபாய் என்ற நிலையிலே விற்கப்படுகின்றன. இந்த மண்ணுக்கு மிகக் குறைந்த அளவிலே ஒரு கட்டணத்தை அரசுக்கு செலுத்திவிட்டு மிக அதிக அளவிலே அவர்கள் லாபம் பெறுகிறார்கள். லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்தான் அதிலே அவர்கள் நடத்துகிறார்கள். சேம்பர் என்று சொல்லி வைத்துக்கொண்டு, ஓடுகளையெல்லாம் அந்த விதமாக, வெகு அதிகமாக அவர்கள் உற்பத்தி செய்கின்ற காரணத்தினாலே அரசு அதைக் கருத்திலே கொண்டு அந்தக் தொழிலுக்கு எப்படி அந்த மண் அளவிற்கு ஒரு கட்டணத்தை நிர்ணயம் செய்யலாம், விற்பனை வரியை எப்படி அவர்கள் ஏய்க்காமல் பார்க்கலாம் என்பதை அரசு கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலங்களில் மண் எடுக்க அனுமதி வழங்குவது தமிழ்நாடு சிறு கனிம விதிகள் 1959 விதி 3 உட்பிரிவு (1)-ன் படியும் மற்றும் பட்டா நிலங்கள் அனுமதி வழங்குவது விதி 19 மற்றும் 21-ன் படியும் மாவட்ட ஆட்சித் தலைவரால் அளிக்கப்படுகிறது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பனங்குடியிலுள்ள செங்கண்குளம், கட்டளையிலுள்ள காடுவெட்டிக்குளம், திடீயூர்க்குளம் ஆகிய மூன்று குளங்களிலும் மற்றும் 13 பட்டா நிலங்களிலும் மண் எடுக்கும் அனுமதி இரண்டு மண் ஓடுகள் தயாரிப்பாளர்களுக்கும் 15 செங்கல் தயாரிப்பாளர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் மாதாந்திர அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியின் பேரில் எடுக்கப்படும் மண்ணுக்கு 10 கன அடிக்கு ரூபாய் 2.25 வீதம் சீனியரேஜ் கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. ஏற்கெனவே இருந்த அரசுகள் இந்த சீனியரேஜ்ஃபீ என்பதை 10 கன அடிக்கு வெறும் 0.45 பைசாக்கள் என்று வைத்திருந்தார்கள்.

[1994 மே 2

நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் ரூ.2.25-ஆக அந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இங்கே மண் எடுப்பதற்குண்டான கட்டணத்தைத்தான் நாம் வசூலிக்கிறோமே தவிர, அவர்கள் அந்த மண்ணை எடுத்து, ஓடுகள் தயாரிப்பது, அதற்குமேலே அவர்கள் விலை வைத்து விற்பது பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் வருமான வரி இலாகாவிற்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மூன்று குளங்களிலும் சில பட்டா நிலங்களிலும்தான் மண் எடுப்பதாகக் குறிப்பிட்டார்கள். மஸ்ரூம் குரோத் என்று சொல்லுவார்கள். அப்படி, கண்ட கண்ட இடங்களிலேல்லாம், அங்கே செங்கல் உற்பத்தியாளர்கள் முளைத்து செங்கல்லை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அநேகமாக, நிறைய குளங்களிலே அவர்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதை எடுக்கும்போது என்ன ஆகிறது என்றால், அவர்கள் சம்பாதிப்பது ஒருபுறம் இருந்தாலும், வண்டிகளைக் கொண்டுபோய், லாரிகளைக் கொண்டுபோய் மணலை ஏற்றும்போது, குளங்களினுடைய கரைகள் எல்லாம் உடைபடுகின்றது. அதனால்தான் மழை வரும்போது அங்கே தண்ணீர் தேங்கி நிற்காத ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. பிறகு அதைச் சீரமைக்கும் போது அரசுக்கு மிகுந்த செலவு உண்டாகிறது. இதன்மூலம் மொத்தமே அரசுக்கு 59 ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வருகிறது என்று சொல்கிறீர்கள். ஆகவேதான் சொல்கிறேன். அப்படி எத்தனை இண்டஸ்ட்ரீஸ் செங்கல் உற்பத்தி செய்வதற்கு, ஓடு உற்பத்தி செய்வதற்கு என்று உண்மையாகவே எத்தனை இருக்கிறது என்பதையெல்லாம் நீங்கள் ஆய்வு செய்து, அவர்கள் எந்த வகையிலெல்லாம் அரசை ஏமாற்றுகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து, உரிய வருவாயை அரசு பெற, உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளத்தனமாக, அரசை ஏமாற்றி யாராவது அப்படி மண் எடுத்தால், அதை அரசுக்குத் தெரிவிக்கின்ற மகத்தான பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள், அப்படி அனுமதி அளித்ததற்கு மீறி யாராவது அரசு குளங்களிலே மண் எடுத்தால் அதை மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்திலே தெரிவிக்க வேண்டும். அதன்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இல்லை என்று சொன்னால் இங்கே இருக்கிற தமிழ்நாடு புவியியல் துறை ஆணையரிடமோ அல்லது அமைச்சராகிய என்னுடைய கவனத்திற்கோ அதைக் கொண்டு வந்தால் நிச்சயமாக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 470, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.